மலர் : 17 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 4

TVGM

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹൺഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

## பிப்ரவரி 2017

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100 - கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM 2017 பிப்ரவரி**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## உன் கர்ப்பத்தின்கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன்.

சங்கீதம் 132 : 11.



Thanks : Mr. Aldrin Issac & Family
Dubai - UAE

காரைக்காலில் தீபாவளி அன்று முழுவதுமாக எரிந்து போன ஜெபவீட்டை மிகவும் எளிய முறையில் கட்டி முடிக்க கிருபை செய்த தேவாதி தேவனைத் துதியுங்கள். சீக்கிரமாக மின்சாரம் அமைத்து பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

2017 ஆம் ஆண்டு அநேக ஜெபவீடுகளை கட்டுவதற்கு பொருளாதார உதவியை கர்த்தர் எழுப்பும்படி ஜெபியுங்கள்.

**தேவனுக்கே மகிமை!**

# TVGM தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கிறிஸ்மஸ் கீத ஆராதனை / பரிசளித்தல்







சகோ. டேவிட் குடும்பத்தினர் பாடல் பாடி, வாழ்த்துரை வழங்கினார்கள்





**Sis.Annie Issac** இஸ்ரேலுக்காக ஜெபித்தல்

TVGM Staffs பாடுதல்







**Rev. குணக்குமார் / திருமதி ஜெயா குணக்குமார்** அன்பளிப்பு வழங்குதல்



## நன்றி

கிறிஸ்மஸ் காலங்களில் TVGM மூலம் பார்வையற்றோர் , தொழுநோயாளர், விதவைகள், சிறுவர் இல்லம் மற்றும் ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்த ஒவ்வொருவருக்கும் நன்றி.

**எருசலேமின் சமாதானத்திற்காக வேண்டிக்கொள்ளுங்கள் ; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக.** சங்கீதம் 122 : 6





**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Airtel : +91 73388 97823**
**BSNL : +91 - 94449 80445**
**( Whatsapp, Viber)**
stephen@tvgm.org

P.T. **கிறிஸ்டோபர்**
TVGM / TASOL ஸ்தாபகர்
**Airtel :+91 73388 97821**
**( Whatsapp, Viber, IMO)**
**+ 91 - 94435 44628 BSNL**
jesus100villages@yahoo.com

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,

தேவசமாதானம் உண்டாவதாக!

2016 ஆம் ஆண்டு முழுவதும் கிருபையாக நடத்தின தேவனுக்கு ஸ்தோத்திரம். கிறிஸ்மஸ் காலங்களில் பொருளாதார நெருக்கடி வருமோ என்று பயந்துக் கொண்டிருந்தோம். ஆனாலும் ஒரு குறைவின்றி படிப்படியாக அனுதின தேவைகளை கர்த்தர் சந்தித்தார். திட்டமிட்ட ஊழியங்களை நிறைவேற்றி முடிக்க கிருபை செய்தார். ஜெபித்த, கொடுத்த, உழைத்த ஒவ்வொருவருக்கும் நன்றி சொல்லுகிறேன்.

2016 டிசம்பர் 23 வெள்ளிக்கிழமை பகல் 1 மணிக்கு ஒரு பெண்குழந்தையை பெர்சிஸ் ஸ்டீபன் சுகத்துடன் பெற்றெடுக்க கர்த்தர் கிருபை செய்தார்.

2017 ஆம் ஆண்டின் தரிசனங்களை கர்த்தர் கிருபையாக நிறைவேற்ற ஜெபியுங்கள். தற்சமயம் TVGM மூலம் இரண்டு கைப்பிரதிகள் அச்சடித்து விநியோகிக்க ஜெபித்து வருகிறோம்.

இந்தியாவுக்காகவும், எருசலேமுக்காகவும் விசுவாசிகள் ஜெபிக்க, இரண்டு தேச படங்களையும் ஒரே கொடியில் போட்டு ஊக்குவிக்கிறோம். 400 பஞ்சாயத்து யூனியன்களில் 4000 கிராம ஊழியர்களுக்கு கைப்பிரதிகள் வழங்கி, ஊக்குவிக்க அநேகருடைய ஒத்துழைப்பு கிடைக்க ஜெபியுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

***தேதி :* 10. 01. 2016**

கிறிஸ்துவின் பணியில்,
**ஸ்டீபன் கிறிஸ்டோபர்.**

# உன் கர்ப்பத்தின்கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன். சங்கீதம் 132 : 11.

2017 ஆம் வருடம் பிப்ரவரி மாத வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, போதகப் பிதாக்களே!

**சங்கீதம் 132 : 11** கூறுகிறது :

**உன் கர்ப்பத்தின்கனியை**

**உன் சிங்காசனத்தினத்தின்மேல்**

**வைப்பேன்.**

**"எனக்குப் பின் யார் ?"** என்று கண் கலங்கும் கர்த்தருடைய பிள்ளையே உன் **'கர்ப்பத்தின்கனியே'** என வேதம் கூறுகிறது.

**2 சாமுவேல் 7**ம் அதிகாரத்தைப் படித்துப் பாருங்கள். கர்த்தர் தாவீது ராஜாவைச் சுற்றியிலும் இருந்த அவனுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் அவனை நீங்கலாக்கி, இளைப்பாறப் பண்ணினபோது, அவன் தன் வீட்டிலே வாசமாயிருக்கையில் ராஜா தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி, "**பாரும், கேதுருமரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணும்போது, தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே** என்றான் ( 2சாமு.7:2 ).

தாவீதின் வாழ்க்கையில் அமைதியான சூழ்நிலையை கர்த்தர் கொண்டு வந்தபொழுது, அவனுக்கு தோன்றிய முதல் எண்ணம் **கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணும்போது, தேவனுடைய பெட்டி** திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே என்பதாகும்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே, வாழ்க்கையில் எத்தனையோ போராட்டங்களை சந்தித்து வந்தீர்கள். நிந்தைகள், அவமானங்கள், நஷ்டங்கள், கண்ணீர், வேதனைகள். இவை எல்லாவற்றிலும் இருந்து தேவன் உங்களை விடுவிக்கவில்லையா ? ஒரு விசை உங்கள் கடந்த கால வாழ்வை சிந்தித்துப் பாருங்கள்.

அற்பமான ஆரம்பத்தின் நாளை அசட்டைபண்ணுகிறவன் யார் ? இன்று எல்லா சத்துருக்களுக்கும் நீங்கலாக்கி கர்த்தர் உங்களை இளைப்பாறப் பண்ணியிருக்கிறார்.

இப்படி கர்த்தர் உங்களை ஆசீர்வதித்திருக்கும்பொழுது, உங்கள் சிந்தை எப்படியிருக்கிறது ? இன்னும், இன்னும் சேர்த்து குவித்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் ஓடிக் கொண்டிருக்கிறதா ?. அல்லது பெயரும், புகழும், அதிகாரமும் வேண்டும் என ஓடிக் கொண்டிருக்கிறீர்களா ?

தாவீதைக் கவனித்துப் பாருங்கள். தனக்கு வாழ்வு வந்தபொழுது, கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய நாத்தானை பார்த்து, **கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணுகிறேன்.**

ஆம், பிரியமானவர்களே ! உங்கள் வீட்டிலே ஒவ்வொரு அலங்காரத்தையும், பொருட்களையும் பாருங்கள். எத்தனை பொருட்கள் தேவையில்லாமல் வாங்கியிருக்கிறீர்கள் ? உடைந்து போனதை சரிசெய்யாமல் அலட்சியம் பண்ணியிருக்கிறீர்கள் ? எத்தனை பொருட்களை உபயோகிக்காமல் பீரோக்களிலும், இரும்பு பெட்டியிலும் பாதுகாத்து

வருகிறீர்கள் ? இது தேவை தானா ? என்று சிந்தித்துப் பாருங்கள்.

கோடி, கோடியாக பல தலைமுறைக்கு சேர்த்து வைத்தாலும் நுனி விரலில் அதிகாரம் வைத்திருந் தாலும், உலகமே உன்னை புகழ்ந்தாலும், '**இன்று நீ மரித்தால் என்னத்தை கொண்டுப் போகப் போகிறாய் ?**'.

**பக்தன் பாடுகிறார் :**

***உன் ஜீவன் போகும் நாளிலே,***
***நாளிலே ஓர் காசுகூட வராதே***
***இயேசுராஜா வருவார்***
***இன்னும் கொஞ்சம் காலம் தான்***
***மோட்சலோகம் சேர்ந்திடுவோம்.***

ஒருவேளை என் பிள்ளைக்கு, வருங்கால என் சந்ததிக்கு என்று நீங்கள் கூறலாம். இன்றைக்கு உங்கள் குடும்பத்தை சிந்தித்துப் பாருங்கள், பிள்ளைகளைப் பாருங்கள். நன்றாக படிக்க வைத்தீர்கள், வேலை வாங்கி கொடுத்தீர்கள், திருமணத்தை நடத்தி வைத்தீர்கள், சேர்த்து சேர்த்து கொடுத்து என்னத்தைக் கண்டீர்கள் ? இன்று உங்களை கவனிக்க ஆள் இல்லையே ? நேரத்திற்கு நேரம் சரியாக சாப்பிட முடியவில்லையே ? இதே நேரத்தில் நீங்கள் கிறிஸ்துவுக்காக இழந்து, பாடுபட்டால் எவ்வளவு மேன்மையாக இருக்கும்.

**பிரசங்கி** கூறுகிறார்: ''அவர்களுக்கு சேர்த்து குவித்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார். ( பிர. 2 : 26 ).''

ஆனால் தாவீது ராஜாவிடம் வெற்றிக்குமேல் வெற்றி வந்தபொழுது, ஏற்பட்ட சிந்தை : **"கேதுருமரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம் பண்ணும்போது, தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக் கிறதே."** இந்த சிந்தை உங்களுக்குள் உருவாக வேண்டும். உங்கள் பிள்ளை களுக்குள் உருவாக வேண்டும், உங்கள் நண்பர்களுக்குள் உருவாக வேண்டும், உங்கள் சபைக்குள் உருவாக வேண்டும்.

இன்று எத்தனை கிராமங்களில், மலைகளில், காலனிகளில் மக்கள் **"சுவிசேஷம்"** இல்லாமல் ஆவிக்குள் அனுதினமும் மரித்துக் கொண்டேயிருக் கிறார்கள். தங்கள் சந்ததியையும் ஆவிக்குரிய மரணத்திற்குள் வழிநடத்து கிறார்கள். காரணம் என்ன ? அவர்களுக்குள் சத்தியம் இல்லை.

வேதம் கூறுகிறது : **யோவான் 8 : 32 சத்தியத்தை அறிவீர்கள் ; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.**

இன்று சுவிசேஷம் அறிவிக்க விசுவாசிகள் இல்லை. சுவிசேஷ கைப்பிரதிகளை வீடுவீடாக கொடுக்க ஆட்கள் இல்லை. ஒரு புறத்தில் பயம், மற்றொரு பக்கம் வெட்கம், இன்னொரு பக்கம் நிர்விசாரம். இன்னொரு பக்கம் சுவிசேஷ தரிசனம் இல்லை, எப்பொழுதும் ஆட்டமும் , கொண்டாட்டமும், தங்களை பிரபல்யப்படுத்துவதும்தான் நடந்துக் கொண்டிருக்கிறது.

இன்று வாடகை கொடுக்க முடியாமல் தவிக்கிற எத்தனை ஊழியர்கள் ? சொந்த குடும்பத்தை பராமரிக்க முடியாமல் எத்தனை ஊழியர்கள் ? ஜெபவீட்டுக்கு பொருட்கள் வாங்க முடியாமல் எத்தனை ஊழியர்கள் ? ஜெபவீட்டுக்கு நிலம் வாங்க முடியாமல் எத்தனை ஊழியர்கள் ? ஜெபவீடு கட்ட முடியாமல் எத்தனை ஊழியர்கள் ?

ஒரு பக்கம் சுவிசேஷம் அறிவிக்க ஆட்கள் இல்லை. மறுபக்கம் உண்மை ஊழியர்களை பொருளுதவியி னாலும், ஜெபத்தினாலும் தாங்குவதற்கு ஆட்கள் இல்லை. தசமபாகம் கொடுத்து விட்டு, அதோடு தங்கள் கடமை முடிந்து விட்டது என்று நினைக்கிற எத்தனை விசுவாசிகள். உங்களுடைய தேவைக்கு மேல் நீங்கள் சேர்த்து சேர்த்து குவித்து வைக்கும் அத்தனையும் **தேவனுடைய ராஜ்யம் விஸ்தரிப்புக்கு** சொந்தமானது அல்லவா ? மறைத்து வைக்காதே.

**மத்தேயு 6 : 20** ‘பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை.

உங்கள் சிந்தனையில் ஒரு மாற்றம் வரட்டும். **கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது.**

பத்திரிகையை வாசித்துவிட்டு, வாக்குத்தத்தத்தை மட்டும் பார்த்து ரசித்து விட்டு போவதில்லை. **தேவனுடைய ராஜ்ய விஸ்தரிப்புக்காக உங்களை அர்ப்பணியுங்கள்.** தேவைகளை அறிந்து செயல்படுங்கள். உங்கள் தாலந்து, படிப்பு, நேரம், பொருளாதாரம், வாகனங்களை கர்த்தருக்கு அர்ப்பணியுங்கள்.

**பக்தன் பாடுகிறார் :**

***கிறி துவுக்காய் இழந்தவர் எவரும்***
***தரித்திரரானதில்லை***
***இராஜ்ய மேன்மைக்காய் கஷ்டம்***
***அடைந்தோர் நஷ்டப்பட்டதில்லை***
***உறக்கம் தெளிவோம்***
***உற்சாகம் கொள்வோம்.***

2017 ஆம் ஆண்டில் விசுவாசிகளே, ஊழியரே, உறக்கம் தெளிவோம்.

**சங்கீதம் 132 : 1 - 5**

கர்த்தாவே, தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும்.

அவன் நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும், யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணுமட்டும்,

என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பதுமில்லை, என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறுவதுமில்லை.

என் கண்களுக்கு நித்திரையையும், என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை என்று,

கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனை பண்ணினான்.

இந்த செய்தியை ஆவலோடு வாசிக்கும் தேவனுடைய பிள்ளையே! உங்களுக்கோர் பொருத்தனை தேவை. உங்கள் சபைக்கு ஓர் பொருத்தனை தேவை. **தேவனுக்காகப் பெரிய காரியங்களைத் திட்டமிடுங்கள், தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்.** ஏனெனில் நம்முடைய தேவன் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களை செய்கிறவர்.

தாவீது தன் உள்ளத்தில் தேவனுக்காக ஒரு ஆலயத்தைக் கட்ட தீர்மானித்த பொழுது, கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதம்:

***உன் கர்ப்பத்தின்கனியை***
***உன் சிங்காசனத்தினத்தின்மேல்***
***வைப்பேன்.***

உங்கள் எதிர்காலத்தைக் குறித்து கவலைப்பட வேண்டாம். **உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து,** அவர்மேல் நம்பிக்கையாயிரு; **அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்** ( சங். 37 : 5 ).

நாத்தான் தீர்க்கதரிசி மூலம் தாவீதுக்கு சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களை கர்த்தர் உங்களுக்கும் கட்டளையிடுவார்.

**2 சாமுவேல் 7 : 11 - 16**

கர்த்தர் உனக்கு வீட்டை உண்டு பண்ணுவார். . . உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்.

அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான் ; அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.

நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான் . . . உனக்கு முன்பாக நான் தள்ளி விட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல, அவனை விட்டு விலக்கமாட்டேன். உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்.

**தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை கர்த்தர் உங்களுக்கும் கட்டளையிடுவாராக. ஆமென்!**

**2016 கிறிஸ்மஸ் காலங்களில் நீங்கள் அனுப்பிய பொருளுதவியினால் தொழுநோயாளர்களுக்கும், விதவைகளுக்கும், பார்வையற்றோருக்கும் அன்பளிப்புகள் வழங்கப்பட்டது.**




பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனியில் அரிசி மற்றும் அன்பளிப்புகள் வழங்குதல்




சூறாவளிப்பட்டி விதவைகளுக்கு அன்பளிப்புகள் வழங்குதல்




காந்திநகர் பார்வையற்றோருக்கு கிறிஸ்மஸ் அன்பளிப்புகள் வழங்கப்பட்டது.



32 பார்வைற்றோருக்கு
நபருக்கு ரூ.8000/–வீதம்
ரூ. 2,56,000 மட்டும் சிறுதொழில்
செய்வதற்காக வழங்கப்பட்டது.
**தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## திருவள்ளூர் மாவட்டம் - கும்மிடிபூண்டி யூனியன்
## 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2017 பிப்ரவரி** 13 திங்கள் காலை 9 மணி முதல் **பிப்வரி** 17 வெள்ளி இரவு 10 மணி முடிய **கும்மிடிபூண்டி யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2017 பிப்ரவரி** 13 திங்கள் காலை **9 - 1** மணி
**கடைசி நாள் ஜெபம் : 2017 பிப்ரவரி** 17 வெள்ளி இரவு **7 - 10** மணி

### உபவாச ஜெபம் நடைபெறும் இடம்


**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
C/o. **பாஸ்டர் A. அருண்குமார்,**
**பெத்தேல் சுவிசேஷ திருச்சபை,**
**சர்ச் தெரு, , எளாவூர் - 601 201.**
**கும்மிடிபூண்டி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்.**
**செல் :** 99947 53924, 91481 25935


உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர் A. அருண்குமார்** அவர்களுக்கு நன்றி.

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, **அனுமதி தபால்** பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.


**சகல தொடர்புகளுக்கும் :** சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** சோமரசம்பேட்டை, திருச்சி - 620


**தேவை :** *10,000* வீடுகளுக்கு சுவிசேஷம் அறிவித்து பின்தொடர்பணி செய்ய ரூ.100,000 ( 1 லட்சம் ) தேவைப்படுகிறது. ஜெபியுங்கள். கர்த்தர் பதிலளிப்பார்.

# தேனி மாவட்டம் - கடமலைக்குண்டு யூனியன் 100 கிராம ஊழிய அறிக்கை

*தேதி : 12.12.2016 முதல் 16.12.2016 முடிய*



கர்த்தருடைய கிருபையால் **தேனி மாவட்டம் – கடமலைக்குண்டு** யூனியனில் 100 கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, இனிப்பு இவைகளை **பாஸ்டர் தீமோத்தேயு , பாஸ்டர் கனகரத்தினம்** அவர்களும் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 55 கிராம ஊழியர்கள் வந்து கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள். முதல்நாள் ஜெபத்தில் **கடமலைக்குண்டு** யூனியனில் ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திரஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பாஸ்டர் தீமோத்தேயு தேவசெய்தி கொடுத்து ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** கிராம ஊழியர்களுக்கு ஆலோசனை கூறினார்கள். பின்பு 13 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். **பாஸ்டர் தீமோத்தேயு , பாஸ்டர் கனகரத்தினம்** ஆகியோர் மதிய விருந்து கொடுத்தார்கள். இதன் பின்பு ஊழியர்கள் குழுக்காக கிராமங்களுக்குள் கடந்து சென்று 5 நாட்கள் ஊழியம் செய்தார்கள். இந்த ஊழியத்தின்போது 12,050 **யோவான் சுவிசேஷப் புத்தகங்கள்**, 15000 **இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள்** கிராமங்களில் இலவசமாக வழங்கப்பட்டது. 197 புறமதநண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து தபால் மூலம் வேதபாடங்களை அனுப்பும்படியும், தங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்கள்.

கிராம ஊழியர்கள் **5** நாட்கள் ஊழியங்களை முடித்து கண்டனூர் சிஸ்வா சபையில் கூடி ஜெபித்து, கர்த்தர் எப்படி கிராமங்களில் தங்களை பயன்படுத்தினார் என்பதை சாட்சியாக கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். **சகோ. P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் ஜெபத்தில் நடத்தினார்கள். **சிஸ்வா சபை**யில் பாஸ்டர் கனகரத்தினம் தேவசெய்தி கொடுத்தார்கள்.



கிராம ஊழியர்கள் யாவருக்கும் கிறிஸ்மஸ் வெகுமதிகளும், பிரயாணப்படியும் TVGM மூலம் வழங்கப்பட்டது. **சிஸ்வா** சபையின் சார்பில் யாவருக்கும் இரவு விருந்து கொடுத்தார்கள். இதன்பின் யாவரும் சந்தோஷமாக அவரவர் ஊர்களுக்கு திரும்பி சென்றார்கள்.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக !**

| ஊழியக் குழுவினர் | விநியோகித்தவை / சேகரித்த விலாசம் |
|---|---|
| **குழு1** சகோதரிகள் – தெரசா, லீதியாள், இன்னாசியம்மாள், அற்புதமேரி, கலாவதி. | 1000 யோவான் சுவிசேஷபுத்தகங்கள், 1250 இயேசுவே இரட்சகர் கைப்பிரதி 29 விலாசங்கள் |
| **குழு2:**சகோதரிகள்–எஸ்தர் எபிநேசர், கிளமெண்ட்ஸ்மேரி, தனம், செல்லக்கனி, எஸ்தர். | 1000 யோவான் சுவிசேஷபுத்தகங்கள், 1250 இயேசுவே இரட்சகர் கைப்பிரதி 16 விலாசங்கள் |
| **குழு3:**சகோதரிகள் – பாத்திமா, மரியம்மாள், கிருபா, ரஞ்சிதம், குணசேகரி. | 1000 யோவான் சுவிசேஷபுத்தகங்கள், 1250 இயேசுவே இரட்சகர் கைப்பிரதி 8 விலாசங்கள் |
| **குழு4:**சகோதரிகள்– ஜான்சி ராணி, குளோரி கவுரி, எப்சி, தெபோராள். | 1000 யோவான் சுவிசேஷபுத்தகங்கள், 1250 இயேசுவே இரட்சகர் கைப்பிரதி 12 விலாசங்கள் |
| **குழு5:**சகோதரிகள்– சாரதா, சாந்தகுமாரி, லீலா, லூயிஸ். | 1000 யோவான் சுவிசேஷபுத்தகங்கள், 1250 இயேசுவே இரட்சகர், 49 விலாசங்கள் |
| **குழு6:**சகோதரர்கள்– மாற்கு மாரியப்பன், தேவதாஸ், ஆண்ட்ரு, மகாராஜன். | 1000 யோவான் சுவிசேஷபுத்தகங்கள், 1250 இயேசுவே இரட்சகர் கைப்பிரதி 5 விலாசங்கள் |
| **குழு7:** சகோதரர்கள் – பிரேம் ஆனந்த், ஸ்டேன்லி, ஜார்ஜ், ஜீவானந்தம். | 950 யோவான் சுவிசேஷப்புத்தகங்கள், 1150 இயேசுவே இரட்சகர் கைப்பிரதி 14 விலாசங்கள் |
| **குழு8:**சகோதரிகள் – வசந்தா, பிளாரி, கஸ்துாரி சுப்பையா, வசந்தா, சாந்தா தேவநேசம். | 1000 யோவான் சுவிசேஷபுத்தகங்கள், 1250 இயேசுவே இரட்சகர் கைப்பிரதி 24 விலாசங்கள் |
| **குழு9:**சகோதரர்கள்– பால்ராஜ், ஆபிரகாம், எட்வர்ட், நிக்சன் | 1000 யோவான் சுவிசேஷபுத்தகங்கள், 1250 இயேசுவே இரட்சகர் , 7 விலாசங்கள் |
| **குழு10:**சகோதரர்கள்– காட்சன் சாம், ஜெரோம், செல்லப்பா, ஏசுராஜா. | 975 யோவான் சுவிசேஷப்புத்தகங்கள், 1200 இயேசுவே இரட்சகர் கைப்பிரதி 10 விலாசங்கள் |
| **குழு11:**சகோதரிகள் – சரோஜா, ஜெயராஜகனி, சுசிலா, பாக்கியம், மரியபுஷ்பம். | 900 யோவான் சுவிசேஷப்புத்தகங்கள், 1200 இயேசுவே இரட்சகர் கைப்பிரதி 8 விலாசங்கள் |
| **குழு12:**சகோதரர்கள் – பீட்டர், யோசுவா, ஜெபமலைநாதன், ஆபிரகாம், பாபு சாலமோன். | 1000 யோவான் சுவிசேஷபுத்தகங்கள், 1250 இயேசுவே இரட்சகர் கைப்பிரதி 10 விலாசங்கள் |
| **குழு13 :**சகோதரி – எஸ்தர் கனகாம்புஜம். | 225 யோவான் சுவிசேஷப்புத்தகங்கள், 200 இயேசுவே இரட்சகர், 5 விலாசங்கள் |

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள் சில

❖ கர்த்தருடைய கிருபையினால் **சக்கம்பட்டி, மேலப்பட்டி, கடமலைக்குண்டு, காட்டுப்பட்டி** கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்தோம். இங்கு எல்லோரும் விக்கிரகங்களை வணங்குகிறார்கள். ஒருவர் மட்டும் எதிர்ப்பு தெரிவித்தார். **சக்கம்பட்டி** கிராமத்தில் ஒரு பெண்ணுக்கு விபத்து ஏற்பட்டு கால்முறிந்ததினால் நடக்க முடியாமல் கஷ்டப்படுவதாக ஜெபிக்கச் சொன்னார்கள். நாங்கள் ஜெபித்தபோது சந்தோஷப்பட்டு, இனி ஆலயத்திற்கு செல்வேன் என்றார்கள்.

❖ **வீரபுரம், சமத்துவபுரம், வெங்கடாசலபுரம்** கிராமங்களில் யாவரும் சுவிசேஷத்தை சந்தோஷமாகக் கேட்டார்கள். வியாதியஸ்தர், பிரச்சனைகளில் இருப்பவர்களுக்காக ஜெபித்தோம். **V. புரம்** என்ற இடத்தில் ஒருவர் எங்களிடம் வாக்குவாதம் செய்தார். அங்கிருந்து வேறு இடம் கடந்து சென்று ஊழியம் செய்தோம்.

❖ **ஜங்கார்பட்டி, காமாட்சிபுரம், சங்கரலிங்கபுரம், தங்கம்மாள்புரம், வாய்க்கால்பாறை** கிராமங்களில் யாவரும் சுவிசேஷப் புத்தங்களை ஆர்வமுடன் வாங்கினார்கள். குழந்தை இல்லை என்று ஒரு பெண் ஜெபிக்கச் சொன்னாள். மக்கள் எங்களை அன்போடு ஏற்றுக் கொண்டார்கள்.

❖ **அண்ணாநகரில்** ஊழியம் செய்தபோது, தினேஷ்குமார் என்ற வாலிபனுக்கு இயேசுவைப் பற்றி கூறி ஜெபித்தோம். தன் பாட்டியோடு இனி ஆலயத்திற்கு செல்வேன் என்றான். **துரைசாமிபுரம், லெட்சுமிபுரம், குப்பி நாயக்கன்பட்டி** கிராமங்களில் மக்கள் இயேசுவைப் பற்றி சொன்னபோது பக்தியோடு ஏற்றுக் கொண்டார்கள்.

❖ **கண்டனுார், சமத்துவபுரம், காலனி** வீடுகளில் சுவிசேஷத்தை அறிவித்தோம். **ரஞ்சித்** என்ற சகோதரன் தன் மனைவி பிரிந்து போய்விட்டதாக கூறி வேதனைப்பட்டார். ஆறுதல் கூறி ஜெபித்தோம். அவர் கழுத்து மற்றும் கையில் கட்டியிருந்த கயிறுகளை அறுத்து தீயில் எரித்துப் போட்டார்கள். இவரை உள்ளூர் போதகரிடம் அழைத்து சென்று தொடர்ந்து ஜெபிக்கும்படி சொன்னோம்.

❖ **ஆசாரிப்பட்டி, முத்துசங்கிலிப்பட்டி, பந்துவார்பட்டி** கிராமங்களில் வாலிபர்களும், சிறுபிள்ளைகளும் வாஞ்சையுடன் சுவிசேஷத்தைக் கேட்டார்கள். கணவனால் கைவிடப்பட்ட முருகேஸ்வரி என்ற பெண்ணுக்கு இயேசுவைப் பற்றி சொன்னபோது, ஏற்றுக்கொண்டு இனி ஆலயத்திற்கு வருவேன் என்றாள்.

❖ **கண்டமனுார், வள்ளல்நதி, வேலாயுதபுரம், கணேசபுரம், எட்டராஜபுரம்** கிராமங்களில் மக்கள் விரும்பி சுவிசேஷப் புத்தகங்களை கேட்டு வாங்கினார்கள். **ரவி** என்பவர் தன் வீட்டிற்கு அழைத்து 17 வயது மகன் காணாமல் போய்விட்டான் ஜெபியுங்கள் என்று கேட்டார். ஜெபித்தபோது குடும்பத்தினர் ஆறுதலடைந்தார்கள்.

❖ **T. லட்சுமிபுரம், ராமசந்திராபுரம், ஆத்தங்கரைப்பட்டி, V. உசிலம்பட்டி, அய்யனார்புரம்** கிராமங்களில் ஊழியம் செய்தோம். பிசாசினால் கட்டப்பட்டு, சமாதானம் இழந்து காணப்பட்ட ஒரு குடும்பத்திற்காக ஜெபித்தபோது, மனபூர்வமாய் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். **அமச்சியாபுரம்** கிராமத்தில் கிறிஸ்மஸ் செய்தியை சொன்னபோது, கிறிஸ்மஸ் அன்று சபைக்கு வருகிறோம் என்றார்கள்.

**தேவனுக்கே மகிமை!**

## பேங்க் , மணியார்டர் மூலம் காணிக்கை அனுப்புபவர்களுக்கு அன்பின் வேண்டுகோள்!

பேங்க் மூலம் நீங்கள் பணம் அனுப்பும்போது, கட்டாயமாக

1) உங்கள் முழுவிலாசம், தொலைபேசி எண், ஈமெயில், Whatsapp

2) எவ்வளவு காணிக்கை, என்ன நோக்கத்திற்காக அனுப்புகிறீர்கள்.

3 ) ஸ்தாபனத்தின் எந்தப் பெயரில், எந்த பேங்குக்கு, எந்த அக்கவுண்ட் நம்பரில் அனுப்புகிறீர்கள் என்பதை **தயவுசெய்து,** தெரியப்படுத்தி உதவுங்கள்.

ஒரு சிலர் எங்களிடம் ஒரு தகவலும் தெரிவிக்காமல் பேங்குக்கு பணம் அனுப்பி விட்டு, பல வாரங்கள் அல்லது மாதங்கள் கழித்து போன் பண்ணி, நாங்கள் பேங்குக்கு பணம் அனுப்பினோம் ரசீது வரவில்லை என்கிறார்கள்.

ஒன்றை தெரிந்துகொள்ள வேண்டும். உங்கள் பணம் பத்திரமாக வருமே தவிர, எந்த விலாசத்தார், என்ன நோக்கத்திற்காக அனுப்பியுள்ளார்கள் என்பதை பேங்க் காரர்கள் எங்களுக்கு தானாக அறிவிப்பு கொடுக்க மாட்டார்கள்.

மிக முக்கியமாக, நாங்கள் நேரடியாக போய் கேட்டாலும், நாளைக்கு வாருங்கள் என்று சொல்லி பலமுறை அனுப்புவார்கள். கடைசியாக கேட்டால் பெயரும், எந்த ஊர் அல்லது நாடு என்றும் சொல்வார்கள். அதற்கு மேல் பணம் அனுப்பியவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள் எங்களுக்கு விபரம் ஒன்றும் தெரியாது என்று கூறி விடுவார்கள்.

ஆதலால் நாங்கள் பணம் பெற்றுக் கொண்டு, ரசீது போட்ட பின்பும், பணம் அனுப்பிய நபருடைய விலாசம் தெரியாததால் அனுப்ப முடியாமல் வைத்துள்ளோளாம்.

பேங்க் மூலம் பணம் அனுப்புகிறவர்கள் முதலாவதே எங்களிடம் தொலைபேசி மூலமாகவோ, அல்லது ஈமெயில் மூலமாகவோ அல்லது Whatsapp மூலமாகவோ தெளிவாக கூறிவிட்டால், எங்கள் கையில் பணம் கிடைத்த மறுநாளே உங்களுக்கு ரசீது நாங்கள் அனுப்பி விடுவோம். உங்களுக்கும் பணம் கிடைத்ததோ கிடைக்கவில்லையோ என்கிற பயம் இருக்காது.

**மணியார்டர் அனுப்பும்போது, தகவலுக்கான பகுதியில்** உங்கள் முழு விலாசம், போன் , ஈமெயில், Whatsapp , காணிக்கை தொகை, உங்கள் நோக்கம் / விருப்பம் யாவையும் மறுபடியும் எழுதுங்கள்.

**To**.....விலாசம் எழுதும்போது உங்கள் செல்போன் நம்பரை போடுங்கள்.

தயவுசெய்து நீங்களும் எங்களோடு உங்கள் ஜெபக்குறிப்புகளை பகிர்ந்து கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் ஆலோசனை கொடுத்து உதவுங்கள்.

**பணம் சம்பந்தமாக நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய விபரம் :**
**பின்வரும் நபர்களில் ஏதாவது ஒருவருக்கு தொடர்பு கொள்ளுங்கள்.**

சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் + 91 94449 80445 whatsapp stephen@tvgm.org
**Office Land Ph:** + 91 431 2607241 **Office Email :** 100village@tvgm.org
சகோதரி ஜெயசீலி கிறிஸ்டோபர் TVGM Administrator + 91 73388 97822

**குறிப்பு :** சகோ. P.T. கிறிஸ்டோபர் அடிக்கடி வெளியூர்களுக்கு ஊழியத்திற்கு செல்வதால், மேலே உள்ள நம்பர்களுக்கு தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மற்றபடி நீங்கள் தொடர்பு கொள்வதில் பிரச்சனை ஒன்றுமில்லை.

## உங்களுக்குத் தெரிந்த பாஸ்டர் பெல்லோஷிப் முகவரிகள், போன் நம்பர் சேகரித்து தந்து உதவுங்கள்

தமிழ்நாட்டில் ஒவ்வொரு பட்டணங்களிலும், தாலுகாவிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் அநேக பாஸ்டர் பெல்லோஷிப் நடைபெற்று வருகிறது.

2017 ஆம் ஆண்டில் எங்களால் முடிந்த அளவு ஒவ்வொரு பாஸ்டர் பெல்லோஷிப்பில் கலந்துகொள்ளும் ஊழியர்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்பட்டால், பின்வரும் ஒழுங்குகளின்படி செய்வதற்கு வாக்குக் கொடுத்து விண்ணப்பப் படிவத்தின் மூலம் எழுதி தருபவர்களுக்கு மட்டும் 500 கைப்பிரதிகள் அச்சடித்து தருவதற்கு ஜெபத்துடன் பிரயாசப்படுகிறேன்.

**ஒரு கைப்பிரதி ( Multi Colour ) அச்சடிக்க ரூ. 1 செலவாகிறது. ஒருவருக்கு 500 கைப்பிரதிகள் இலவசமாக கொடுக்க ரூ. 500 செலவாகிறது.**

ஆதலால் ஒழுங்கும்கிரமுமாக ஊழியம் செய்து, **ஊழிய அறிக்கையை பாஸ்டர் பெல்லோஷிப்** தலைவர்கள் மூலமாக சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டுமே, மறுமுறை தேவைப்பட்டால் கைப்பிரதி இலவசமாக வழங்கப்படும்.

திருச்சியிலிருந்து உங்களுக்கு கொரியர் மூலமாக அல்லது பார்சல் சர்வீஸ் மூலமாக அனுப்ப வேண்டுமென்று விரும்பினால்,

1) உங்கள் முழு முகவரி , தொலைபேசி, Whatsapp, Email யாவையும் +91 73388 97821 க்கு SMS அனுப்புங்கள்.

2 ) பார்சல் அனுப்ப வேண்டிய கொரியர் பெயர், விலாசம் அல்லது பார்சல் சர்வீஸ் விலாசம் யாவையும் விபரமாக எழுதி அனுப்ப வேண்டும்.

3 ) மேற்கண்ட இரண்டு விபரங்களையும் அனுப்பியவுடன் உங்களுக்கு **ஊழிய அறிக்கைப்படிவம்**, ஒழுங்குமுறைகள் அனுப்பி வைக்கப்படும்.

4) ஊழிய அறிக்கைப்படிவத்தின்படி வரவேற்பு, எதிர்ப்பு, ஆத்துமாக்களின் வாஞ்சை பற்றிய தகவல்களை தருவதற்கு சம்மதித்தால் மட்டும்,

**பார்சல் அனுப்ப ஏற்படும் செலவையும், விரும்பினால் உங்கள் காணிக்கையையும் சேர்த்து TVGM முகவரிக்கு M.o.அனுப்ப வேண்டும் அல்லது TVGM Bank A/c க்கு அனுப்ப வேண்டும்.**

5) கைப்பிரதி 500 (650 கிராம்) அனுப்ப கொரியர் செலவு – ரூ.50 மட்டும். நீங்கள் அனுப்பும் பணம் கிடைத்த பின்பே, 500 கைப்பிரதிகள் அனுப்பப்படும்.

**திருச்சி – சோமரசம்பேட்டையில் நேரடியாக வந்து வாங்கினால், இலவசம்.**

6) மறுபடியும் தேவையானால் இதைப் போல விண்ணப்பிக்க வேண்டும்.

7 ) **கைப்பிரதிகள் 500 முற்றிலும் இலவசமே.**

**குறிப்பு :** 1) உங்களிடம் ஏற்கனவே கைப்பிரதிகள் ஏராளம் இருந்தால், மீண்டும் எங்களிடம் விண்ணப்பிக்க வேண்டாம்.

2 ) மேலும் உங்களுக்கு சொந்தமாக கைப்பிரதிகள் பிரிண்ட் செய்ய பொருளாதார வசதிகள் இருந்தால், தயவுசெய்து விண்ணப்பிக்க வேண்டாம்.

3 ) TVGM தரிசனம் கைப்பிரதி ஊழியம் செய்யாதவர்களை செய்யும்படி ஊக்குவிக்க வேண்டும். கைப்பிரதி இல்லாதவர்களுக்கு கொஞ்சமாவது இலவசமாக கொடுக்க வேண்டும். முடிந்தஅளவு ஒவ்வொரு ஊராட்சியிலும் 10 ஊழியர்களுக்காவது கொடுக்க வேண்டும் என்பதாகும்.

# இயேசுவின் சகோதரர் யாக்கோபு

## ( யாக்கோபு எனும் பொதுவான நிருபத்தை எழுதியவர் )

இயேசுவின் ஊழியகாலத்தில் அவருடைய உடன் பிறந்தோர் யாரும் அவரை கிறிஸ்து என்று விசுவாசிக்கவில்லை (யோவான் 7:5). ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு, தம்முடைய சகோதரனாகிய யாக்கோபுக்குத் தரிசனமான பின்பு இயேசுவை கிறிஸ்துவாகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டார் ( 1 கொரி. 15 : 7 ). அப்போஸ்தலர்களுடன் இணைந்துகொண்டார் (அப். 1:4). அவருடைய ஊழியத்தின் ஒரு பகுதியாக **'கிரியையுள்ள விசுவாசம்'** என்ற மையக் கருத்தில் பொதுவான நிருபத்தையும் எழுதியுள்ளார்.

இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு, **கிறிஸ்தவர்கள் மத்தியில் மட்டுமல்ல, யூதர்கள் மத்தியிலும் உத்தமனும் நீதிமானுமாகக் கருதப்பட்டார்.** ஆட்டு ரோம உடைகள் எதுவும் உடுத்தாமல், மெல்லிய வஸ்திரம் மாத்திரமே உடுத்துவார். இவருடைய பரிசுத்த ஜீவியத்தினாலே தேவாலயத்திற்குள் பிரவேசித்துத் தொழுது கொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றிருந்தார். அந்த சிலாக்கியத்திற்கு இன்னுமொரு காரணமுண்டு. அவர் எந்த வேளை தேவாலயத்திற்குள் பிரவேசிக்கிறாரோ அது முதல் வெளியே வரும் வரை முழங்காலிலேயே நின்று மக்களின் பாவ மன்னிப்பிற்காக மன்றாடி விண்ணப்பம் செய்வார். அவர் அவ்வாறு தொடர்ந்து செய்ததின் விளைவாக அவரது முட்டுகள் காய்ப்பு ஏறி மரத்துப் போய்விட்டன. ஒட்டகத்தின் முட்டிகளைப் போல கடினமாகி விட்டன. இவ்வாறு அவர் ஜெபிப்பதால் **நீதிமானாகிய யாக்கோபு, மக்களின் பாதுகாவலனாகிய யாக்கோபு** என்ற நற்பெயர்களை பெற்றிருந்தார்.

யாக்கோபின் மூலமாக **யூத குலத்தினிலும், வேதபாரகர்களிலும், பரிசேயர்களிலும்** சில முக்கியமானவர்கள் மனமாற்றமடைந்து, **இயேசுவே கர்த்தர்** என்று ஏற்றுக்கொண்டனர். அவர்களைத் தொடர்ந்து யூதர்கள் சிலர் அவரைப் பின்பற்ற ஆரம்பித்தார்கள். இந்த நிலவரம் நீடிக்க ஆரம்பித்ததால், அநேக **யூதர்கள் இயேசுவைப் பின்பற்ற ஆரம்பித்துவிடுவார்கள்** என தேவாலய ஆசாரியர்கள் அச்சமடைந்தனர். எனவே தேவாலய அதிகாரிகள் யாக்கோபை வரவழைத்து, **இயேசுவை கிறிஸ்து என்றும் கர்த்தர் என்றும் பிரசங்கிப்பதை, நீர் நிறுத்திக் கொள்ள வேண்டும்.** மேலும் **இயேசுவை மறுதலித்து பஸ்கா பண்டிகையில் தேவாலயத்து உப்பரிகையின் மேல் நின்று பிரசங்கிக்க வேண்டும். ஏனென்றால் மக்கள் நீர் பிரசங்கித்தால் ஏற்றுக் கொள்வார்கள்** என சொன்னார்கள். **யாக்கோபு பதில் ஏதும் கூறாமல் மவுனமாக நின்றார்.**

அவரது மவுனத்தை அவர்கள் சம்மதம் என்று எண்ணி, பஸ்கா பண்டிகை அன்று தேவாலயத்து உப்பரிகையின் மீது நிறுத்தினர். அவர் பேசாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தபடியால், இவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் பேச்சைத் துவக்கினார்கள். நீதிமானாகிய யாக்கோபே, **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை மக்கள் பின்பற்றி வழிவிலகிச் செல்கிறார்களே இது சரியா? நாம் யாருக்குக் கீழ்படியவேண்டும்?** என்று கேட்டனர். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து நான் என்ன பதில் சொல்வது.

**இயேசு மரித்து, உயிர்த்தெழுந்து பரத்திற்கு ஏறி உன்னதமான தேவனின் வலது பாரிசத்திலிருந்து எல்லோருக்காவும் பரிந்து பேசிக் கொண்டிருக் கிறார். அவரே பரலோகத்திலிருந்து மேகங்களின் மத்தியில் இறங்கி வருவார் என மிக அழுத்தம் திருத்தமாக உப்பரிகையின் மேலிருந்து கூடிவந்திருந்த மக்கள் கேட்கும்படி பதிலளித்தார்.** இதைக் கேட்ட மக்கள் கூட்டம் உரத்த சத்தமாக, **தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா** என்று கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இதைக் கண்டு ஆத்திரமடைந்த வேதபாரகரும் பரிசேயர்களும் இவனை நம்பி, நாம் தவறு செய்துவிட்டோமே, இவன் நம்மை மோசம் போக்கிவிட்டானே என்று கருதி, இவன் மக்களை வஞ்சிக்கிறவன், இவன் துரோகி என்று சத்தமிட்டு கூறி, **யாக்கோபை உப்பரிகையின்மேலிருந்து கீழே தள்ளி விட்டனர்.** அவர் தமது கடினமான முழங்காலின் முட்டிகள் ஊன்ற தரையில் விழுந்தார். பெரிய உயத்திலிருந்து விழுந்து நொறுங்கிப் போவான் என்று எதிர்பார்த்த அவர்களுக்கு அது பெரிய ஆச்சரியமாக இருந்தது. கீழே விழுந்த அவர், என் **தேவனாகிய கர்த்தாவே, என் பிதாவே, இவர்களை மன்னியும், இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்** என்று மன்றாடினார். அவர்கள் அவர் மீது கல்லெறிந்து கொல்ல முற்பட்டனர். கூட்டத்திலிருந்த ஒருவர், கொஞ்சம் பொறுங்கள், அவர் உங்களுக்காகத் தானே ஜெபிக்கிறார் என்று கையைக் காட்டி அமர்த்த முயன்றார். இந்த நேரத்தில் ஆத்திரமடைந்த ஒருவன் அவரை **வண்ணான் துணிதுவைக்க உபயோகிக்கும் கனத்த கட்டையால் தலையில் ஓங்கி அடித்தான். யாக்கோபின் மண்டை உடைந்து அப்பொழுதே மரணமடைந்தார்.** அவர் விழுந்த அதே இடத்தில் குழி தோண்டி அங்கேயே புதைத்து விட்டனர். யாக்கோபு, யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் இயேசுகிறிஸ்துவின் சத்தியத்திற்குச் சாட்சியாக மரணத்தைத் தழுவினார். அவருடைய தியாக ஜீவியமும் அவருடைய நிருபமும் இன்னும் நம்மோடு பேசிக் கொண்டிருக்கிறது. இரத்த சாட்சிகள் சிந்திய இரத்தம் பின்னாட்களில் சபையின் வித்தாக மாறியது.

**நன்றி: 'நம்பிக்கையின் வாசல்'**

## இயேசு கூறுகிறார் : மத்தேயு 9: 37, 38

அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் ; ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

## TVGM சேவைக்கு அழைக்கப்பட்டவர்கள் தேவை

நீங்கள் கர்த்தருடைய ஊழியத்திற்கு அர்ப்பணித்தவர்களா ? எங்கு போய் ஊழியம் செய்வது என்று தெரியாமல் தேவனுடைய சமூகத்தில் காத்துக் கொண்டிருக்கிறீர்களா ?உங்கள் தாலந்துகளையும், படிப்பையும், அந்தஸ்தையும் கர்த்தருக்கு அர்ப்பணித்து மனத்தாழ்மையாய் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முன்வருவீர்களேயானால், TVGM உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

கம்ப்யூட்டர் , TALLY A/c படித்தவர்கள், சிறுவர் இல்லத்தைக் கவனிக்க வார்டன், டெம்போ டிராவல் ஓட்ட லைசன்ஸ் பெற்று அனுபவம் உள்ளவர்கள் மற்றும் வாட்ச்மேன், சமையல் பணியாளர், சீஷத்துவப் பயிற்சி நடத்த அனுபவமுள்ளவர்கள், சுவிசேஷப் பணியை விஸ்தரிக்க பிரயாணம் செய்ய கிருபை பெற்றவர்கள் அநேகர் தேவை.

உண்ணவும், உடுக்கவும், தங்கவும் இருந்தால் போதும் என்ற நிலையில் உள்ள கர்த்தருடைய பிள்ளைகள் தொடர்பு கொள்ளுங்கள். + 91 73388 97821

## நாகர்கோவில்TVGM அறிமுகப்பணி அலுவலம்
## 2016 டிசம்பர் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2016 டிசம்பர் மாத ஊழியங்களை நேர்த்தியாக முடிக்க கர்த்தர் உதவி செய்தார். ஊழியர்கள் யாவரையும் மிக அதிசயமாக பயன்படுத்தினார். 22 நாட்களில் எல்லா பகுதிகளையும் சந்தித்து முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். கடந்த வருடம் நேரிட இருந்த விபத்துகளிலிருந்து கர்த்தர் தப்புவித்தார். குறைவின்றி எல்லோரையும் நடத்தினார்.

ஊழியர் பற்றாக்குறை வராதபடி உடனுக்குடன் புதிய ஊழியர்களை ஊழியத்தில் இணைத்து ஊழியங்கள் தடைபடாதபடி கர்த்தர் பாதுகாத்துக் கொண்டார்.தேவனுடைய கிருபையினால் புதிய வருடத்திற்குள் பிரவேசித்துள்ளோம்.

**தேவனுக்கே மகிமை !**

**TVGM அறிமுகப்பணி அலுவலகம்**
**5 / 3A** கிரவுண் தெரு, கி ருஷ்ணன் கோவில்,
நாகர்கோவில் – 629 001. போன் : 04652 - 277251

கிறிஸ்துவின் பணியில்,
N. ஷோபனா இவாஞ்ஜலின்
**73388 97834 Airtel**

**இயேசுகிறிஸ்துவின் சாட்சிகள் – பிப்ரவரி மாத T.V.நிகழ்ச்சிகள்**

| T.V. பெயர் | இந்திய நேரம் | தேதி | தேவ செய்தி |
|---|---|---|---|
| Heaven T.V. கன்னியாகுமரி மாவட்டம் | வெள்ளி இரவு 7.00-7.30இந்திய நேரம்Online ( Live ) www.**heaventv.in** | 02<br>09<br>16<br>23 | சகோ. P.T. கிறிஸ்டோபர்<br>சகோ. P.T. கிறிஸ்டோபர்<br>சகோ. P.T. கிறிஸ்டோபர்<br>சகோ. P.T. கிறிஸ்டோபர் |
| JTK T.V. திசையன்விளை | சனி இரவு 8.00 - 8.30 | 03<br>10<br>17<br>24 | சகோ. P.T. கிறிஸ்டோபர்<br>சகோ. P.T. கிறிஸ்டோபர்<br>சகோ. P.T. கிறிஸ்டோபர்<br>சகோ. P.T. கிறிஸ்டோபர் |
| JTK T.V. திருநெல்வேலி | ஞாயிறு இரவு 9.30 - 10.00 **இந்திய நேரம்** On line ( Live ) www.**jtktv.org** | 04<br>11<br>18<br>25 | சகோ. P.T. கிறிஸ்டோபர்<br>சகோ. P.T. கிறிஸ்டோபர்<br>சகோ. P.T. கிறிஸ்டோபர்<br>சகோ. P.T. கிறிஸ்டோபர் |

## 2017 பிப்ரவரி மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : திருவண்ணாமலை
யூனியன் : தண்டராம்பட்டு
நாள் : 25.02.2017
நேரம் : காலை 10.00 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் C. சுதாகரன் - ஏ.ஜி. சர்ச்**
யூனியன் ஆபிஸ் எதிரில், தாணிப்பாடி மெயின் ரோடு,
தண்டராம்பட்டு – 606 707. திருவண்ணாமலை மாவட்டம்.
செல் : **94882 72263 , 97506 58414**

## தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?

**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல்**
**மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. யாக்கோபு. 5 : 16.**

**திங்கள் :** 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31க்குள் தமிழ்நாட்டிலுள்ள 400 பஞ்சாயத்து யூனியன்களிலும் குக்கிராமங்களில் ஊழியம் செய்கிற 400 ஊழியர்களை கண்டுபிடித்து, ஒரு நபருக்கு 500 கைப்பிரதியாவது முதல் கட்டமாக TVGM மூலம் வழங்கப்பட ஜெபியுங்கள்.

**செவ்வாய் :** 2017 ல் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் 4 சபைகளிலாவது ஆத்தும பாரத்தைக் கொடுத்து, விசுவாசிகளை கைப்பிரதி ஊழியத்தில் ஊக்குவிக்கவும், அவர்களுக்கு தேவையான கைப்பிரதிகளைக் கொடுக்கவும் கர்த்தர் கிருபை செய்ய ஜெபியுங்கள்.

**புதன் :** TTI ( TVGM Training Institute ) மாதந்தோறும் ஆண்கள் / பெண்கள் இருபாலருக்கும் நடத்த ஒரு தரிசனம் பெற்ற வேதாகம ஆசிரியர் முழு நேர ஊழியராக முன்வரவும், ஒவ்வொரு சபையிலுமுள்ள போதகர்கள் தங்கள் சபைகளிலிருந்து பிள்ளைகளை அனுப்ப ஜெபியுங்கள்.

**வியாழன் :** ஆரம்பநாட்களில் TVGM வளர்ச்சிக்கு உதவியாயிருந்த தேவ பிள்ளைகள் உலகில் எப்பக்கத்தில் இருந்தாலும் கண்டுபிடித்து, அவர்களுக்காக ஜெபித்து நல்ல ஆவிக்குரிய ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள ஜெபியுங்கள்.

இதைப் போல TTI படித்த பழைய மாணவர்கள், TVGM அலுவலகத்தில் பணிபுரிந்த ஊழியர்கள், 100 கிராம ஊழிய தன்னார்வத் தொண்டர்கள், TVGM ல் முழுநேர கிராம ஊழியம் செய்தவர்களின் தொடர்புகள் கிடைக்க கர்த்தர் கிருபை புரிய ஜெபியுங்கள்.

**வெள்ளி :** TVGM ஊழியத்தை நேசிக்கிற போதகர்களை அடையாளம் கண்டு, அவர்கள் சபையை ஊக்குவித்து ஜெபத்தினாலும் பொருளுதவியினாலும் தாங்குவதற்கு முன்வர ஜெபியுங்கள்.

**சனி :** ஒரு முறையாவது பைபுள் ஸ்கூல் மாணவ, மாணவிகளுக்கு கிராம ஊழிய தரிசனம் கொடுத்து ஊக்குவிக்க கர்த்தர் கிருபை புரியும்படியாக ஜெபியுங்கள்.

**ஞாயிறு : வேதாகமம் ஏன் பரிசுத்த வேதாகமம் என அழைக்கப் படுகிறது ?** ன்ற தேவசெய்தி பல மொழிகளில் வெளிவரவும்,

பரிசுத்த வேதாகமத்திலுள்ள 66 ஆகமங்களிலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடுகள் 66 தேவசெய்தியாக T.V. மற்றும் வேறு மீடியாக்களில் வெளிவரவும் ஜெபியுங்கள்.

இந்திய ரூபாய் நோட்டிலுள்ள 16 + ஆங்கிலம் மொழிகளில் TVGM சிலுவைக் கொடிகள் மற்றும் சகோ. P.T. கிறிஸ்டோபர் எழுதிய '**இம்மையில் சமாதானம், உங்களுக்குச் சமாதானம்**' மற்றும் கைப்பிரதிகள் ஒவ்வொரு பாஷையிலும் அச்சடிக்கப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட ஜெபியுங்கள்.

**ஏசாயா** 53ம் அதிகாரத்தை எபிரெய, கிரேக்க பாஷைகளில் அச்சடித்து யூதர்களுக்கு வழங்க ஜெபியுங்கள்.

**தேவனைத் துதியுங்கள்**

ஜெபிக்கிற, கொடுக்கிற, உழைக்கிற ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள், துதியுங்கள்.

**சகல தொடர்புகளுக்கும்**

**BRO.STEPHEN CHRISTOPHER - Managing Trustee**

**TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)**

**"1OO-VILLAGE" , Somarasampettai,Trichy - 620 102. India.**

**Ph: 0- 431 - 2607241** **Cell : 73388 97822 Airtel**

**Email :** 100village@tvgm.org Web : **www.tvgm.org**

Founder: P.T.Christopher:+ 91 **73388 97821** jesus100villages@yahoo.com


***ALL RECEIPTS ARE TREATED AS OFFERING TO TVGM***

**இந்தியாவிலுள்ள பேங்க் மூலம் காணிக்கை அனுப்பும் முறை**

| | |
|---|---|
| **Tamil Village Gospel Mission**<br>A/c No **:12491010 - 23822**<br>Canara Bank | 100 கிராம ஊழியம்,யோவான் சுவிசேஷம்,<br>கைப்பிரதிகள், பின்தொடர்பணி, ஜெபவீடு,<br>100 கிராம ஊழியம் பத்திரிகை சந்தா |
| **TVGM Social service**<br>( 80G வரி விலக்கு உண்டு )<br>A/c No **: 12491010 - 23805**<br>Canara Bank | சிறுவர் இல்லம், சிறுவர் இல்ல கட்டிடம்,<br>தொழுநோயாளர், விதவைகள்,ஏழைகள்,<br>பார்வையற்றோர், தையற்பள்ளி.<br>100 கிராம ஊழியம் பத்திரிகை சந்தா |

**வெளிநாட்டிலுள்ள பேங்க் மூலம் காணிக்கை அனுப்பும் முறை**

| | |
|---|---|
| **Tamil Village Gospel Mission**<br>A/c No **: 12491010 -11947**<br>Canara Bank | 100 கிராம ஊழியம்,யோவான் சுவிசேஷம்,<br>கைப்பிரதிகள், பின்தொடர்பணி, ஜெபவீடு,<br>100 கிராம ஊழியம் பத்திரிகை சந்தா |
| **TVGM Social service**<br>A/c No **: 12491010 - 24967**<br>Canara Bank | சிறுவர் இல்லம், சிறுவர் இல்ல கட்டிடம்,<br>தொழுநோயாளர், விதவைகள்,ஏழைகள்,<br>பார்வையற்றோர், தையற்பள்ளி.<br>100 கிராம ஊழியம் பத்திரிகை சந்தா |

**Branch** : Trichy **Puthur branch code : 1249**

IFSC Code : **CNRB 000 - 1249** Swift Code : **CNRBINBBMFD**

தயவுசெய்து, பணம் அனுப்பிய பின்பு, பணம் அனுப்பிய A/c No.படிவத்தில் எழுதிக் கொடுத்த நோக்கம், தொகை, அனுப்பிய தேதி யாவையும் தெரியப்படுத்துங்கள்.

**100village@tvgm.org** + 91 431 2607241, Cell : + 91 94449 80445


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher
from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai,
Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers,
C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**






23.12.2016 கிறிஸ்மஸ் கீத விழாவில் **Rev. குணக்குமார்** (நற்செய்தி நண்பன் ஸ்தாபகர்) / தேவசெய்தியளித்தார்கள்.








**திரு ஆரோக்கியராஜ்** குடும்பத்தார் 40 பேர் TVGM தலைமையகத்திற்கு வந்து, தங்கள் பேரனுக்கு கர்த்தர் கொடுத்த சுகத்திற்காக சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு துணிகள், சிறப்பு விருந்தளித்து, பேரனுடைய பிறந்த நாளை கேக் வெட்டி கொண்டாடினார்கள்.





**பாஸ்டர் விவேகானந்தன் ( பிரான்ஸ் )** அவர்கள் TVGM Staff களுக்கு தேவசெய்தியளித்து, வரவேற்பரையை திறந்து வைத்தார்கள்.

**தேவனுக்கே மகிமை!**

REG. NEWS PAPER **R.N.I. Number : TNMUL / 2000 / 04011**
**HUNDRED VILLAGE MINISTRY** ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
**POSTAL REGISTRATION NUMBER :TRY / 066 / 2015 - 2017**
**Licensed to post under W.P.P. No : TN / PMG (CR) / WPP / 01 / Dec. 2015 - 2017 Dec.**
**Posting Date 25th, 26th, 27th at Trichy RMS every month**



TVGM ல் 26 வருடமாக பணிபுரிந்து வரும் **சகோ. ஆரோக்கியம்** மகள் **மரியா / சாம்** திருமணத்தில் **சகோ. P.T.கிறிஸ்டோபர்** வாழ்த்துரை வழங்கினார்கள்.



IBCM தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் **பாஸ்டர் பிரசாத்** அவர்களின் மகள் **பிரசாந்தி / ஸ்டீபன்** திருமணத்தில் **சகோ. P.T. கிறிஸ்டோபர்** ஆசீர்வதித்து ஜெபித்தார்கள். நன்றி ஆராதனையில் வாழ்த்துரை வழங்கினார்கள்.

**TO**

**Return Requested:**
T V G M Publication Trust
4 / 274, Hundred Village
Somarasampettai, Trichy - 620 102. India.